2020 மார்ச் 21]

முதியோர் ஓய்வூதியம் வழங்குதல், அரசு உதவிபெறும் முதியோர் இல்லங்களில் தங்கி பயனடையும் முதியோர்களுக்கு தடுப்பூசித் திட்டம் ஆகியவற்றை தமிழக அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தற்போது மூத்த குடிமக்கள் தேசிய செயல் திட்டத்தையொட்டி விரிவான மாநில செயல் திட்டம் வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநில செயல் திட்டத்தினைச் செயல்படுத்திட மத்திய அரசிடமிருந்து ரூ.2 கோடி ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.

2.4 மூன்றாம் பாலினர் நலன்

சமுதாயத்தில் கவனிப்பாரற்று பல்வேறு பிரச்சினைகளை மூன்றாம் பாலினர் எதிர்கொள்கின்றனர். மூன்றாம் பாலினரின் நலனில் அக்கறைகொண்டு, அவர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றாம் பாலினர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை உருவாக்கிடவும், கல்வி உதவித் தொகை, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அளித்து சமுதாயத்தில் அவர்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு மூன்றாம் பாலினருக்கு ஒரு நல வாரியத்தை அமைத்துள்ளது. இந்த நல வாரியமானது, மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 11 அலுவல்சார் உறுப்பினர்களையும், 12 மூன்றாம் பாலின அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்டது.

மதிப்புடனும், நேர்மையான முறையிலும் தொழில் செய்து தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளும்பொருட்டு மூன்றாம் பாலினர்களுக்கு மானியமாக ரூ.20,000/- முதல் ரூ.50,000/- வரை வழங்கி, மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், துணி, கயிறு, அரிசி, காய்கறி வியாபாரம், ஆட்டோ ஓட்டுதல் மற்றும் சரக்கு ஆட்டோ ஓட்டுதல் போன்ற தொழில்களை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.75.00 இலட்சம் நிதியுதவியில் 150 மூன்றாம் பாலினர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினருக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1,000 மூன்றாம் பாலினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

[2020 மார்ச் 21

இதுவரை, மூன்றாம் பாலினர் பெற்ற பயன்பாடுகளின் விவரம்:

மூன்றாம் பாலினர் என கண்டறியப்பட்டவர்கள்	:	7,536
அடையாள அட்டை பெற்றவர்கள்	:	6,551
தையல் இயந்திரம் பெற்றவர்கள்	:	144
குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடு பெற்றவர்கள்	:	515
கல்வி உதவித் தொகை பெற்றவர்கள்	:	9
குடும்ப அட்டை பெற்றவர்கள்	:	2,531
வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள்	:	1,671
மருத்துவ காப்பீட்டு அட்டை பெற்றவர்கள்	:	1,489

மூன்றாம் பாலினர்கள் சமுதாயத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்கு ஏதுவாக அரசு பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. காவல் துறையில் ஐந்து நபர்கள் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் பணியிலும், இரண்டு நபர்கள் சுகாதாரத் துறையில் இயன்முறை மருத்துவர் மற்றும் ஆய்வக உதவியாளர் பணியிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். சமூக நலத் துறையின்கீழ், சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையலராக இருவர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இருவர் அலுவலக உதவியாளர் மற்றும் ஈப்பு ஓட்டுநராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், எட்டு நபர்கள் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் பாதுகாவலர்களாக பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

இச்சமூகத்தில் தங்களுடைய சொந்த முயற்சியில் படித்து, தனித் திறமை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறியவர்களில் மூன்றாம் பாலினர்கள் ஒருவருக்கு மூன்றாம் பாலினர் தினமான ஏப்ரல் பதினைந்தாம் நாளன்று "மூன்றாம் பாலினருக்கான விருது" ரூ.1,00,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழுடன் 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

அனைத்து மூன்றாம் பாலினர்களும் தங்களின் சுயவிவரங்களைப் பதிவு செய்துகொள்ள சிறப்பு முயற்சியாக ஒரு செயலி உருவாக்கிட ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்றாம் பாலினத்தோர் பற்றிய கணக்கெடுப்பு மற்றும் தகவல்கள் சேகரித்திட ரூ.13.07 இலட்சம் தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 21]

மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்டரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு தலைவர் மற்றும் 9 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விசாரணை செய்து உடனடியாகத் தீர்வு காண இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. இதைத் தவிர வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 ஆகிய சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு 2019-2020-ல் வரப்பெற்ற மொத்த மனுக்களின் எண்ணிக்கை 1,751 ஆகும். இவற்றில், 1,421 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மீதம் உள்ள 330 மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தேசிய மகளிர் ஆணையத்தின் உதவியோடு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாவட்டந்தோறும் பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது.

இவ்வாணையத்தின் செலவினத்திற்காக 2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ரூ.55.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் 1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் தன்னார்வ முயற்சிகளை